தரம் 12

முதலாந்தவணை

சங்ககாலம்



# தமிழ்

## புறத்திணைப் பொருள்மரபு

A.Harichandran
CP/G/westhall/T.V
Kataboola
Nawalapitiya.

## புறத்திணை பொருள் மரபு

- புறத்திணை என்பது காதல் சாராத ஏனையவற்றை பாடுவதாகும். சிறப்பாக போரொழுக்கமும், வீரம், கொடை நிலையாமை முதலியனவும் புறத்திணையின் பாற்படும்.
- பெயர் சுட்டிய காதற் பாடல்களும் புறத்திணையினுள்ளே வகைப்படுத்தப் படுகின்றது.
- ஐவகை போரொழுக்கங்களும், காஞ்சித்திணையும், பாடாண்திணையும், புறத்திணையுள் அடங்கும்.
- குறிஞ்சி - வெட்சி
- முல்லை - வஞ்சி
- மருதம் - உழிஞை
- நெய்தல் - தும்பை
- பாலை - வாகை

- காஞ்சிதிணை என்பது இளமை, யாக்கை, செல்வம் முதலானவற்றின், நிலையாமையைப் பாடுவதாகும்.
- இது ஆண்பாற்காஞ்சி, பெண்பாற்காஞ்சி என இருவகைப்படும்.
- பாடாண்திணை என்பது பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு என்பர். ஒருவரது வீரம், கொடை, குணம், செயல், புகழ் பற்றி கூறுவதுடன் அறிவுரைக் கூறி வாழ்த்துதலும் ஆகும்.

# வினா இல.01

**சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையளமிடுக.**

1. புறத்திணை என்பது காதல் சாராத ஏனையவற்றை பாடுவதாகும்.

   ( ✓ )

2. போரொழுக்கம், வீரம், கொடை, நிலையாமை முதலியன புறத்திணை பாற்படும்.

   ( ✓ )

3. பெயர் சுட்டிய காதல் பாடல்களும் புறத்திணையாகவே கொள்ளப்படும்.

   ( ✓ )

4.புறத்திணை ஒழுக்கம் சங்கமருவிய காலத்திலேயே தோன்றியது.

   ( ✗ )

5. ஐவகை நிலங்களுக்கும் புற ஒழுக்கம் உண்டு

   ( ✓ )

6. ஐவகை போரொழுக்கங்களும், காஞ்சிதிணையும் பாடாண்திணையும் புறத்திணையில் அடங்கும்.

( ✓ )

7. குறிஞ்சிப் பாட்டு, பதிற்றுப் பத்து நூல்கள் புறத்திணைப் பற்றி கூறுகிறது.

( ✗ )

8. பூக்களின் பெயர்களினால் அந்தந்த நிலப்பகுதிகளின் புற ஒழுக்கம் அழைக்கப்பட்டன.

( ✓ )

9. பெயர் குறித்து பாட முடியாத காதல் பாட்டுக்களும் புறத்திணையில் அடங்கும்.

( ✗ )

10. காஞ்த்திணை என்பது இளமை, யாக்கை, செல்வம் முதலானவற்றின் நிலையாமையைப் பாடுவதாகும்.

( ✓ )

11. பாடாண்திணை என்பது பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு ஆகும்.

( ✓ )

12. பெரும்பாலான புறப்பாடல்கள் புலவர் கூற்றாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

( ✓ )

13. இயற்கைக்கு புறத்திணையில் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

( ✗ )

14. மன்னர்களுக்கு நல்லறிவு ஊட்டலும் வாழ்த்துப் பாடல்களும் புறத்திணையில் அடங்கும்.

( ✓ )

15. காஞ்சிதிணை ஆண்பாற்காஞ்சி, பெண்பாற்காஞ்சி என இருவகைப்படும்.

( ✓ )

**02. இடைவெளிக்கு பொருத்தமான சொல்லினை இட்டு இடைவெளியை பூர்த்தி செய்க.**

1. ___குறிஞ்சி நில மக்கள்___ பிற நிலத்து மந்தைகளை களவிற் கொண்டு போதல் காரணமாக ஏற்படும் பூசல் **வெட்சி** எனப்படும்.
2. குறிஞ்சி நிலத்தோர் ஆநிரைகளைக் கவர்வதற்கு செல்லும்போது ___வெட்சிப் பூவை___ சூடிச் செல்வார்கள்.
3. முல்லை நில மக்கள் தம் பகைவரை அடக்குதற் பொருட்டு முல்லை நில எல்லைப் புறங்களுக்குச் சென்று ___பாடி வீடு___ அமைத்து தங்கி இருப்பர்.
4. முல்லை நில மக்கள் அமைத்த பாடி வீடு வேனிற் பாசறை ___கூதிர் பாசறை___ என இருவகைப்படும்.
5. வேனிற் பாசறை ___முதுவேனிற்___ காலத்தில் அமைக்கப்படும்.
6. கூதிர்ப் பாசறை ___கூதிர்___ காலத்தில் அமைக்கப்படும்.
7. முல்லை நிலத்து போரொழுக்கம் ___வஞ்சி___ ஆகும்.
8. மருத நிலத்து போரொழுக்கம் ___உழிஞை___ ஆகும்.

9. குறிஞ்சி முல்லை ஆகிய நிலங்களில் இயற்கை அறன்கள் ________உண்டு________

10. மருத நிலத்து அரசனும் மக்களும் பகைவரிடத்து நின்று தம்மையும் தம் பொருளையும் காத்தற் பொருட்டு செயற்கையரண்கள் அமைத்து வாழ்ந்து வந்தனர்.

11. மருத நிலத்து மக்களை ________உழவர்கள்________ என அழைப்பர்.

12. நெய்தல் நிலத்தில் ______களம் குறித்து______ போர் நிகழ்த்துதல் வழக்காறாய் இருந்தது.

13. நெய்தல் நிலத்தில் நடைபெற்ற போரொழுக்கம்________தும்பை________ எனப்பட்டது.

14. தும்பையாவது வேந்தனொருவன் தன் வலிமையை உலகோர் ______புகழ்தலையே______ பொருளாகக் கருதி பகை வேந்தன் மீது போர்த் தொடுப்பான்.

15. பாலை நிலத்தில் வாழ்ந்தோர் ____மறவர்கள்____ எனப்படுவர்.

16. பாலை நிலத்தோர் போருக்குச் சென்றபோது ____வாகைப்பூச்____ சூடிச் சென்றனர்.

17. எத்துறையிலும் வெற்றி பெற்று விளங்குதலை பிற்காலத்தோர் ____வாகைச் சூடுதல்____ என்பர்.

18. செல்வம், இளமை, யாக்கை ஆகியவற்றின் நிலையாமையைக் கூறுவது ____காஞ்சித்தணை____ என்பர்

19. அரசர்களின் கொடை, தண்ணளி, நட்பு, வீரம், வெற்றி, ஆட்சி சிறப்பு போன்ற சீரிய குணங்களை எடுத்துரைப்பது ____பாடாண்திணை____ ஆகும்.

20. சங்ககாலத்தில் எழுந்த புறத்திணை செய்யுள்களுள் பெரும்பாலானவை ____பாடாண்திணையில்____ பாற்படுவன.

**03. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. குறிஞ்சி நிலத்தின் புற ஒழுக்கம் என்பது யாது?

   1. வஞ்சி 2. வெட்சி 3. தும்பை 4. வாகை

2. எந்நிலத்தில் ஆநிரைகளை கவர்ந்து செல்வதன் மூலம் போர் ஏற்படும்.

   1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. பாலை

3. பாலை நிலத்தில் வாழும் மக்களை எப்பெயரால் அழைப்பார்கள்.

   1. பரதவர்கள் 2. குறவர்கள் 3. ஆயர்கள் 4. மறவர்கள்

4. பாலை நிலத்தவர்களின் தொழில் யாது?

   1. வேட்டையாடுதல் 2. மீன்பிடித்தல்

   3. வழிபறிகொள்ளை 3. உழவுத்தொழில்

5. எல்லைப் புறங்களுக்குச் சென்று பாடி வீடு அமைத்து தங்கியிருந்து போர் புரிவோர் யார்?

   1. குறிஞ்சி நிலத்தவர்
   2. முல்லை நிலத்தவர்
   3. மருத நிலத்தவர்
   4. நெய்தல் நிலத்தவர்

6. முதுவேனிற் காலத்தில் அமைக்கப்படும் பாசறையின் பெயர் யாது?

   1. வேனிற் பாசறை
   2. கூதிர் பாசறை
   3. போர் பாசறை
   4. பாடி வீடு

7. களம் குறித்து போர் புரியும் வழக்காறு எந்நிலத்திற்குரியது?

   1. குறிஞ்சி
   2. முல்லை
   3. மருதம்
   4. நெய்தல்

8. மருத நிலத்து மக்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

   1. வேடுவர்
   2. உழவர்
   3. பரதவர்
   4. ஆயர்கள்

## 04. சுருக்கமான விடை தருக.

1. காஞ்சித்திணை என்றால் என்ன?

   காஞ்சித்திணை என்பது இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை எடுத்துக் கூறி நன்னெறியில் செல்லுமாறு அறிவுறுத்தி விளக்குவதாகும்.

2. காஞ்சித்திணை எத்தனை வகைப்படும்?

   - ஆண்பாற்காஞ்சி
   - பெண்பாற்காஞ்சி

3. ஆண்பாற்காஞ்சி என்பது யாது?

   ஆண்பாற்காஞ்சி என்பது போரிலே புண்பட்ட வீரனொருவன் அப்புண்ணை ஆற்றிக்கொண்டு வாழும் உலக வாழ்க்கயை வேண்டாது அப்புண்ணை கிழித்துக் கொண்டு இறந்து போதல், அவ்வீரனை நாய், நரி, முதலியன தீண்டாவண்ணம் பிறர் அவனைக் காத்தல் அல்லது அவன் மனைவி அவனைக் காவல் செய்து நிற்றல்.

4. பெண்பாற்காஞ்சி என்பது யாது?

பெண்பாற் காஞ்சி என்பது மனைவியொருத்தி தன் கணவன் போர்க்களத்தே மடிந்து கிடக்க அவனைத் தழுவிக் கொண்டு அழுதல், உடனுயிர் நீத்தல், உடன்கட்டை ஏறுதல் முதலியனவாகும்.

5. பாடாண்திணை என்பது யாது?

பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு என்பர். அதாவது ஒருவரது வீரம், கொடை, குணம், செயல், புகழ் பற்றிப் புகழ்ந்து கூறுவதுடன் அறிவுரை கூறி, வாழ்த்துதலுமாகும்.

6. அறிவுரை கூறுவனவும், வாழ்த்துக்களை தெரிவிப்பனவான பாடல்கள் எவ்வகையில் அடங்கும்?

பாடாண்திணையில் அடங்கும்

7. ஆற்றுப்படை என்றால் என்ன?

ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல். ஏன பொருளபடும். கூத்தர், பாணர் முதலியோர் ஓர் வள்ளலிடம் சென்று பொருள் பெற்று மீண்டும் வரும் வழியில் வறுமை பிணியில் வாடிய இரவலரை காணில் தாம் பெற்ற செல்வத்ததை இரவலருக்கு கூறி அவ்வள்ளலிடம் சென்று பொருள் பெறுமாறு வழிபடுத்தல்.

8. ஆற்றுப்படை இலக்கிய அமைப்பில் காணப்படும் மூன்று அம்சங்கள் எவை?

- பொருள் பெற்றவன் பொருள் பெறாதவனை நோக்கி விளித்தல்.
- கொடை கொடுத்தோனுடைய சிறப்பு பற்றி கூறுதல்.
- அரசனை அல்லது வள்ளலை அடையும் வழி பற்றி கூறுதல்

9. ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றுவாயை எவ்விலக்கியத்தில் காணலாம்?

புறநானுறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில்

10. புறநானூற்றில் காணப்படும் இருவகை ஆற்றுப்படைகளும் எவை?

விறலியாற்றுப்படை

பாணாற்றுப்படை

11. ஆற்றுப்படை இலக்கியத்தில் தன்னிகரில்லாத் தலைவர்களாக விளங்குபவர்கள் யாவர்?

புரவலர்கள்

12. வீடுபேறினை விரும்பும் ஒருவரை ஆற்றுப்படுத்துவதற்காக அமையும் ஆற்றுப்படை இலக்கியம் எது?

திருமுருகாற்றுப்படை

13. மன்னர்களுக்கு நல்லறிவூட்ட புலவர்கள் முயன்ற சம்பவம் ஒன்றினை குறிப்பிடுக.

துன்பத்தை எடுத்துக் காட்டுவதன் மூலம் மறைமுகமாக அதைச் செய்யாதே என்று அரசருக்கு நல்லறிவூட்ட முயன்றனர்.

14. புலவர்கள் புறத்திணை இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ள பண்புகள் இரண்டு தருக.

- சுருங்கிய சொல்லும் விரிந்த பொருளும் கொண்ட மொழிநடையை கையாளுதல்.
- வீரம், கொடைச்சிறப்பு முதலானவற்றை புகழ்ந்துரைப்பதற்கு ஏற்றவகையில் ஆற்றுப்படை முதலான உத்திகளை கையாளுதல்.

15. பாலை நிலத்தின் போரொழுக்க சிறப்பினை குறிப்பிடுக.

பாலை நிலத்தில் வாழ்ந்தோர் போருக்குச் சென்றபோது வாகைப்பூச் சூடி செல்வார்கள். இவர்கள் எந்நிலத்திற் சென்று போர் புரிந்த போதும் வெற்றியின்றி மீண்டதில்லை. இதனால் வெற்றிக்கு வாகை என்பர்.

05. சங்க இலக்கியங்களின் புறத்திணை பொருள்மரபினை விளக்குக.

- புறம் என்பது காதல் சாராத ஏனையவற்றை பாடுவதாகும். சிறப்பாக போரொழுக்கம், வீரம், கொடை, நிலையாமை முதலியனவும் புறத்திணைப் பாற்படும்.
- பெயர் சூட்டிய காதற் பாடல்களும் புறத்திணையினுள்ளேயே வகைப்படுத்தப்படுகின்றது.
- ஐவகை போரொழுக்கமும், மேலதிகமாக தோற்றம் பெற்ற காஞ்சிதிணை, பாடாண்திணை என்பனவும் புறத்திணையில் அடங்கும்.
- காஞ்சிதிணை பற்றிய விளக்கம்……
- பாடாண்திணை பற்றிய விளக்கம்……
- இயற்கைக்கு முக்கியத்துவம் வழங்கள்……
- அணிப்பயன்பாடுகள்……
- புலவர்களின் அறிவுரை வாழ்த்து……

போன்ற விடயங்களை உள்ளடக்கி தொகுத்து எழுதப்படல் வேண்டும்.